## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2020

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச அபிவிருத்திச்சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகளின் 4.09(பீ) பிரிவு மற்றும் 2016 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 5768-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதிசார் உடன்டிக்கையின் பிரகாரம் விவசாய மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, கால்நடைவள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் கடல்நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தற்போதைய நீர்ப்பாசன அமைச்சு என்பன செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர்களாக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் ஊவா மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்கொண்டு செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகவுள்ளது. மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,048 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42 மில்லியனாக உள்ளதுடன் முழுத்தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோம்பர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய

முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இலக்கம் | கணக்கீட்டுக் குறைபாடுகள்/ கணக்காய்வு விடயங்கள் | பெறுமதி ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| 01 | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 24 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதிக்குரிய பாதீட்டுடன் நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட தொகைகளுக்கான விலைகளின் ஒப்பீடு தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும் அந்த தேவைகளுக்கு இணங்கி இருக்கவில்லை. | 1,983.62 | செயற்திட்டத்தின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. 2014 ஆகஸ்ட் இல் செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் இந்த ஏற்றுக்கொள்ளல்கள் பின்பற்றப்பட்டு இருந்ததுடன் இது உலக வங்கியை உள்ளடக்கிய உரிய அதிகார தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களை உள்ளடக்கிய ஒப்பீட்டு ரீதியான அறிக்கை ஒன்று இணைக்கப்பட்டு உள்ளது. | இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களின் தேவையின் பிரகாரம் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| 02 | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 18 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று செயற்பாடுகள், முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளின் கீழ் 21 பந்தி முதல் 32 வரை அர்த்தப்படுத்தப்பட்டதன் பிரகாரம் செயற்பாடுகள், முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகளாக வகைப்படுத்துதல் மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். வகைப்படுத்தலின் அடிப்படையில் பின்வரும் இனங்காணல்களுடன் மேற்கூறப்பட்ட நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இணங்கியிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டில் செயற்திட்ட நடவடிக்கையாக இலங்கை அரசாங்கத்தின் நிதியத்தில் இருந்து ரூபா 3,000,000 தொகையும், உலக வங்கி ஒத்துழைப்பின் கீழ் ரூபா 1,525,040,601 தொகையும் | 1,528.04 | ஐயவினாவின் பிரகாரம் ரூபா 3,000,000 தொகை உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 1,525,046,601 தொகை வெளிநாட்டு நிதியத்திலிருந்து செலவிடபட்டிருந்தது. செயற்திட்ட ஆரம்பம் முதல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி 2020 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேவையான திருத்தங்கள் செயற்திட்டத்தின் எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | இலங்கை பொது துறை கனக்கீட்டு நியமங்களின் தேவையின் பிரகாரம் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செலவினங்களில் கணிசமான சதவீதமொன்று செயற்திட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக செலவிடப்படுகிறது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இல் மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறிகாட்டிகளுக்கு இணங்க செலவினங்கள் செலவின கூற்று தயாரிக்கும்போது செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட பணம் அந்த செலவினங்களில் தனித்தனியாக இனங்காணப்பட்டு இருக்கவில்லை. மேற்கூறப்பட்ட பிரகாரம் ரூபா 156,087,461 தொகை முதலீட்டு செயற்பாடுகளாக இனங்காணப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 1,525,135,735 மொத்த முதலீடாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இனங்காணப்பட்டிருந்தது. | | | |
| 03 | முற்பண கணக்கு மீதி மீளாய்வாண்டின் ரூபா 143,865,494 இனால் குறைவடைந்து இருந்ததுடன் ஏனைய மீதிகளின் சேமிப்பு ரூபா 12,317,101 இனால் நடப்பாண்டில் குறைவடைந்தது. நியமத்தின் குறிகாட்டிகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முதலீட்டு செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் இனங்காணப்படாத சீராக்கங்கள் முழுமையாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 12.46 | முற்பண கணக்குகள் மற்றும் ஏனைய செலுத்தும் மீதிகள் செயற்திட்டத்தினால் கணக்காய்விற்கு முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் அந்த விதத்திலேயே சமர்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொது துறை கனக்கீட்டு நியமங்களின் தேவையின் பிரகாரம் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| 04 | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தினால் நடப்பாண்டின் போது நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 3 மில்லியன் தொகை நிதி செயற்பாடுகளின் மூலம் உருவான காசுப்பாய்ச்சலாக தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 3 | எதிர்வரும் காசுப்பாய்ச்சல் கூறுக்களில் உள்நாட்டு நிதியங்களில் இருந்து செலவிடப்பட்ட செலவினங்களை வேறு பிரிப்பதற்காக வேலைத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொது துறை கனக்கீட்டு நியமங்களின் தேவையின் பிரகாரம் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| 05 | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 59, 60 ,61, 62 ஆம் பந்திகளின் கீழ் ஏனைய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளபடாமையால் உரிய காசுப்பாய்ச்சல் கூற்று, நியமத்தில் | | செயற்திட்டத்தினால் எதிர்வரும் கணக்காய்விக்கு சமர்ப்பிக்கப்படும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் | இலங்கை பொது துறை கனக்கீட்டு நியமங்களின் தேவையின் பிரகாரம் நிதி கூற்றுக்கள் |

| | | |
|---|---|---|
| குறிப்பிடப்பட்ட நிதி அறிக்கைகளின் தேவைகளுக்கு இணங்கியிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சீராக்கங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இலக்கம் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 01 | மன்னார் யோத குளத்தை சுற்றியுள்ள கால்வாய் கட்டுக்களின் இரண்டு பக்கமும் புற்களைப் பதிப்பதற்காக ரூபா 4,544,430 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், கட்டின் மேற்பரப்பு 04 மீற்றர் அகலமாக இருக்க வேண்டிய போதிலும் கட்டின் மேற்பரப்பில் பல்வேறு அகலங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அதானிக்கப்பட்டது. நிர்மாணங்கள் குறித்த நியமத்திற்கு இணங்காமையினால் தேசம் ஏற்படும் சந்தர்ப்பம் காணப்பட்டது. | மன்னார் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட பிரகாரம் 2017 மார்ச்சில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதுடன், 2018 மார்சில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது இந்த வேலைகள் 03 வருடங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மன்னார் மாவட்டம் அதிக உலர் வலய நிலமாக இருந்தமை தெளிவான காரணமாக இருந்ததுடன், அந்த வலயத்தில் காணப்படுகின்ற அதிக வரட்சியின் காரணமாக புற்பிடிகள் உலர்ந்து போயிருந்தது. இந்த பிரதேசத்தில் உள்நாட்டு மக்களின் பிரதான ஜீவனோபாயமான பாற்பண்னை மற்றும் ஆட்டு பண்ணைகள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளாகும். அதனால் இந்த நிலைமையின் கீழ் குளக்கட்டின் வீதியில் மாடுகள் மற்றும் ஆடுகள் பயணம் செய்வதை தவர்க்க முடியாதிருந்தது. அதனால் குளக்கட்டின் வீதி இயற்கையான பாதிப்பிற்கு உட்பட்டிருந்ததுடன், இந்த நிலைமை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்ட பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நிதி ஏற்பாட்டின் கீழ் | உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குளக்கட்டின் வீதிகளில் இவ்வாறு பாதிக்கப்பட்ட இடங்கள் வருடாந்தம் பராமரிக்கப்படுகின்றது. | |
| 02 | மன்னார் வெள்ளக்கட்டு குளக்கட்டிற்காக கூறுவிலை கோரப்பட்ட தேவையான மண் குளக்கட்டிற்கு 1.2 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து கொண்டுவருவதாக இருந்தது. எனினும், குளக்கட்டிற்காக ஈடுபடுத்தப்பட்ட மண் குளக் கட்டின் உள்ளிருந்து பெறப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 659,214 பெறுமதியான வேலை விடய இலக்கம் 6.4 நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மன்னார் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட பிரகாரம் குளக்கட்டை நிரப்புவதற்காக பொருத்தமான மண் பொறியியல் ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னர் குளத்தின் ஓரங்களில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. குளத்தின் அருகிலுள்ள போக்குவரத்து தூரமும் ஏற்றுக் கொள்ள முடியும். அவ்வாறே ரூபா 659,214 பெறுமதியான வேலை விடய இலக்கம் 6.4 இல் குளக்கட்டின் ஓரங்களில் புற்பிடிகளை பதிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் ஒப்பந்தகாரரினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் புற்களை பராமரித்தல் (தண்ணீர் பாய்ச்சுதல்) உரிய பிரகாரம் ஒப்பந்த கால எல்லையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், புற்பிடிகள் உலர்ந்து போயிருந்தது. இந்த நிலைமையின் கீழ் இந்த விடயங்களுக்காக செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்படவில்லை. | வேலைகளை சரியான பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரருக்கு ஆலோசனை வழங்குதல் அவசியமாகும். |
| 03 | இராஜாங்கனை கெமி இசுரு விவசாய அமைப்பிற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 7,254,730 தொகை நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காகவும், ரூபா 1,260,033 தொகை பயிர் செய்கை குளங்களுக்காகவும், ரூபா 4,962,931 தொகை கால்வாய் முறைமைக்காகவும் செலவிடப்பட்டிருந்தன.<br>எனினும், 2021 வரையிலும் குளங்கள் மற்றும் நீர் வழங்கல் செயற்திட்டம் விவசாய நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் பிரகாரம் தற்போது விவசாய அமைப்பினால் உலர் நாட்களில் பயிரிடல் நடவடிக்கைகளுக்காக தேவையான நீரை வழங்குவதற்காக பம்பி நீர்ப்பாசன முறைமை ஈடுபடுத்தப்படுகின்றது. எனினும், செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் (PMU) உத்தியோகத்தர்களின் குழுவொன்றை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் களப் பரிசோதனையின் பின்னர் தற்போதைய நிலைமை அறிவிக்கப்படும். | வேலைகளை சரியான பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரருக்கு ஆலோசனை வழங்குதல் அவசியமாகும். |

| | | | |
|---|---|---|---|
| 04 | மொனராவன இடது கரை கால்வாய் கட்டின் வீதியில் மண், கல் மற்றும் புற்பிடிகள் பதித்து 1000 மீற்றர் தூரத்தில் வீதிப் பகுதியொன்று அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,702,786 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வீதியின் 834 மீற்றர் அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன், அபிவிருத்தி செய்யப்படாத 166 மீற்றருக்காக ரூபா 614,662 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 05 | மொனராவன அணைக்கட்டின் இடது மற்றும் வலது கால்வாயை மீள நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கும் போது கையினால் அத்திவாரம் வெட்டுவதற்காக ரூபா 1,281 விகிதத்தில் 147.38 கனமீற்றர் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஜேசீபீ இயந்திரத்தின் மூலம் ரூபா 146.58 வீதத்தில் அத்திவாரம் வெட்டுவதற்காக மேலதிகமாக ரூபா 167,191 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 06 | மொனராவன தெற்கு கால்வாயை மீண்டும் நிர்மாணிக்கும் போது 225 ஆவது மீட்டர் இல் கால்வாயின் கல்லை உடைப்பதற்காக ரூபா 3,168.66 தொகை ஊழிய விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்த போதிலும் 119.18 மீட்டர் கல் உடைப்பதற்காக ரூபா 1,468.88 தொகை இயந்திர விதத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 202,579 தொகை மேலதிக மதிப்பீடு மற்றும் மிகை கொடுப்பனவு காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை | உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 07 | ஒரு கனமீட்டருக்கு ரூபா 2,450 வீதம் 1639.125 கனமீட்டர் கிரவல் போடுவதற்காகவும், 5511 மீட்டர் நீளத்தில் சத்தாதிஸ்ஸ குளத்தின் வலது கரை கால்வாய் கட்டை மீள | பதிலளிக்கப்படவில்லை | வேலைகளை சரியான பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரருக்கு ஆலோசனை வழங்குதல் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்காகவும் ரூபா 4,015,856 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வீதியின் 10 இடங்களில் 148.8 மீட்டர் கிரவல் இடப்படாதிருந்ததுடன் ரூபா 108,430 தொகை பூர்த்தி செய்யப்படாத வேலைகளுக்காகவும் செலுத்தப்பட்டிருந்தது. | | அவசியமாகும். |
| 08 | சத்தாதிஸ்ஸ குளத்தின் வலது கரை கால்வாய் நிர்மாணிக்கும் கால எல்லையில் நீர் மற்றும் பயிர் செய்கைகள் நிறுத்தப்பட்டு இருந்த போதிலும் கால்வாயினை மீள நிர்மாணிக்கும் கால எல்லையில் நீரை அகற்றுவதற்கு 2,216.47 மணித்தியாலங்களுக்காக ரூபா 842,258 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்திட்ட நோக்கங்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்/ கொடுப்பனவுகள்

| இலக்கம் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 01 | வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ரூபா 4,075.95 மில்லியன் தொகையில் 109 ஒப்பந்தப் பொதிகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன், இதனிடையே ரூபா 1,187.50 மில்லியன் பெறுமதியான 25 ஒப்பந்த பொதிகளின் ஒப்பந்த காலம் மற்றும் காத்திருத்தல் எல்லையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்த பொதிகள் 03 மாதங்கள் முதல் 24 மாத காலம் வரையான வீச்சில் தாமதம் அடைந்திருந்தது. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் குறித்த ஒப்பந்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்படாத ரூபா 1,187.50 மில்லியன் பெறுமதி உடைய 25 ஒப்பந்த பொதிகள் நீர்ப்பாசன திணைக்களத்தினால் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (CRIP) நிதியின் கீழ் கையளிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த பொதிகளின் தாமதம் 03 மாதங்கள் முதல் 24 மாதம் வரையான கால வீச்சில் காணப்பட்டது. இந்த பொதிகளை குறித்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்படாத நிலைமைக்காக எதிர்பார்க்கப்படாத கால நிலைமைகள், இரும்பு போன்ற மூலப் பொருட்கள் சந்தையில் காணப்படாமை, உரிய நேரத்தில் மண் மற்றும் கல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்வதில் வசதியீனம், காணப்படுகின்ற Covid-19 | வேலைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செயற்திட்ட கால எல்லையை நீடிப்பதற்கு பரிந்துரை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தாமதத்திற்காக காரணங்களை இனங்காண்பதற்காக முறையாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொற்றுநோய் நிலைமையின் கீழ் விதிக்கப்பட்ட நடமாடும் வரையறைகள் மற்றும் நாடு மூடப்பட்டமையின் காரணமாக கால ரீதியில் ஊழியங்களை பெற்றுக்கொள்வதில் வசதியீனம் இருந்தமை என்பன காரணமாக இருந்தன. இந்த Covid -19 தொற்றுநோயினால் உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் செயற்திட்டத்திற்காகவும் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த சகல ஒப்பந்தங்களுக்கான கால நீடிப்பு தேவையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தை (CRIP) அமுல்படுத்துவதில் பூர்த்தி செய்யும் திகதியான 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் சகல ஒப்பந்தம் பொதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |
| 02 | இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ரூபா 1,083.20 மில்லியன் பெறுமதி உடைய 27 ஒப்பந்த பொதிகள் கையளிக்கப்பட்டிருந்தது. இதனிடையே ரூபா 192.80 மில்லியன் பெறுமதியுடைய 04 ஒப்பந்தங்கள் ஒப்பந்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்த பணிகளில் தாமதம் 08 மாதம் முதல் 32 மாதங்கள் வரையான கால வீச்சினை கொண்டிருந்தது. | காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (CRIP) கீழ் இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 192.80 மில்லியன் பெறுமதியுடைய 04 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த பொதிகளை பூர்த்தி செய்யும் தாமத காலம் 08 முதல் 32 மாதங்கள் வரையான கால வீச்சில் காணப்பட்டது. இந்த பொதிகளை குறித்த பொதிகள் குறித்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்படாத நிலைமைக்காக எதிர்பார்க்கப்படாத கால நிலைமைகள், இரும்பு போன்ற மூலப் பொருட்கள் சந்தையில் காணப்படாமை, உரிய நேரத்தில் மண் மற்றும் கல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்வதில் வசதியீனம், காணப்படுகின்ற Covid -19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் விதிக்கப்பட்ட நடமாடும் வரையறைகள் மற்றும் நாடு | வேலைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செயற்திட்ட கால எல்லையை நீடிப்பதற்கு பரிந்துரை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தாமதத்திற்கான காரணங்களை இனம் காண்பதற்காக முறையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூடப்பட்டமையின் காரணமாக கால ரீதியில் ஊழியங்களை பெற்றுக்கொள்வதில் வசதியீனம் இருந்தமை என்பன காரணமாக இருந்தன. இந்த Covid -19 தொற்றுநோயினால் உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் செயற்திட்டத்திற்காகவும் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த சகல ஒப்பந்தங்களுக்கான கால நீடிப்பு தேவையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தை (CRIP) அமல்படுத்துவதில் பூர்த்தி செய்யும் திகதியான 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் சகல ஒப்பந்தம் பொதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |
| 03 | ஊவா மாகாணத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 1,931.75 மில்லியன் பெறுமதியான 17 ஒப்பந்த பொதிகள் கையளிக்கப்பட்டிருந்தது. இதனிடையே ரூபா 1,012.50 மில்லியன் பெறுமதியுடைய 08 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 1,012.5 மில்லியன் பெறுமதியுடைய 08 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த கால எல்லையில் பூர்த்தி செய்யப்படாது இருந்தமையே குறிப்பிடப்பட்டுள்ளது. கொவிட் - 19 தாக்கத்தின் காரணமாக ஒப்பந்ததாரருக்கு ஊழிய படையணியை கண்டறிவதற்கு முடியாதிருந்தது. இது தாமதத்திற்கு பிரதான காரணமாக இருந்ததுடன், செயல் முன்னேற்றத்திற்காக நிச்சயமற்ற காலநிலை நிலைமையும் தாக்கம் அளித்திருந்தது. ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சகல ஒப்பந்த பொதிகளும் 2020 திசெம்பர் 31 அளவில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செயற்திட்ட கால எல்லையை நீடிப்பதற்கு பரிந்துரை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட தாமத்திற்கான காரணங்களை இனம் காண்பதற்காக முறையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| 04 | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 7,090.90 மில்லியன் பெறுமதியுடைய 153 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்ததாரருக்கு | கையளிக்கப்பட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் தவறியிருந்தமை, பணிகளின் தன்மை மற்றும் நீர் பிரச்சனைகள் காணப்பட்டமையினால் நிர்மாண வசதியின்மை போன்ற பல்வேறு காரணங்களால் அமுல்படுத்தல் நிறுவனத்தினால் அனேக | மேலதிக காலம் மற்றும் கிரயங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் செயற்பாடுகளை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கையளிக்கப்பட்டிருந்தது. இதனிடையே ரூபா 182.18 மில்லியன் பெறுமதியுடைய 03 ஒப்பந்த பொதிகள் பல்வேறு காரணங்களினால் நிறுத்தப்பட்டிருந்தது. | செயற்படுத்தப்படாத ஒப்பந்த தொகுதிகள் நிறுத்தபட்டிருந்தது. திட்டமிடப்பட்ட வகையில் வேலைகள் நிறைவேண்டியிருந்தமையினால் பெறுகை நடவடிக்கைகள் (உதாரணம். சீபீ அல்லது கொள்வனவு) பூர்த்தி அடைந்ததன் பின்னர் அநேகமான வேலைகள் மீண்டும் மதிப்பீடு செய்து மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது. தற்போது வரையில் சகல மீள்கையளித்தல் வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தவறிமைக்கு உரிய ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டம் 2021 இன் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளமையினால் அதன் பின்னர் உரிய நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் பாதகமாக தாக்கமளித்து இருந்தமை கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் அடிப்படையில் சொத்துக்கள் உரிய நிறுவனங்களுக்கு உரித்தாக இருந்ததுடன் அவர்களினால் அவை பராமரிக்கபடுகின்றது. அந்த நிறுவனங்களின் தேவைகளுக்காக அந்த சொத்துக்களை ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்த முடியுமா என்பது தொடர்பாக செயற்திட்டத்தின் வழிகாட்டியொன்று வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் இருப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும். |